செ.வெ.எண்:201 நாள்:31.03.2021

**இளம் வாக்காளர்களைக் கொண்டு வாக்காளர் விழிப்புணர்வு மாதிரியினை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் திறந்து வைத்தார்.**

---

புதுக்கோட்டை புதிய பேருந்து நிலையத்தில் உணவு பாதுகாப்பு துறையின் சார்பில் வாக்காளர் விழிப்புணர்வு மாதிரியினை இளம் வாக்காளர்களைக் கொண்டு மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் இன்று (31.03.2021) திறந்து வைத்து பார்வையிட்டார். பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக சட்டமன்ற பொதுத்தேர்தல் ஏப்ரல் 6ல் நடைபெற உள்ளதையொட்டி புதுக்கோட்டை மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவை ஏற்படுத்தும் வகையில் வாக்காளர்களிடையே பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம் புதுக்கோட்டை புதியபேருந்து நிலையத்தில் உணவு பாதுகாப்புத் துறையின் சார்பில் புதுக்கோட்டை மாவட்டத்தை சேர்ந்த பேக்கரி கடை உரிமையாளர்கள் மூலம் கேக்கால் அமைக்கப்பட்ட வாக்காளர் விழிப்புணர்வு மாதிரி இளம் வாக்காளர்களைக் கொண்டு திறந்து வைத்து பார்வையிடப்பட்டது.

மேலும் பிஸ்கட்டில் அமைக்கப்பட்டிருந்த வாக்காளர் உதவி எண் 1950 குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்களும் இதில் எழுதப்பட்டிருந்தது. இதே போன்று மாவட்டம் முழுவதும்

வாக்காளர்களிடையே வாக்களிப்பதன் அவசியத்தை உணர்த்தும் வகையில் விழிப்புணர்வு துண்டு பிரசுரம் வழங்குதல், இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி, மினிமாராத்தான், மனித சங்கிலி உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே வாக்காளர்கள் அனைவரும் தேர்தல் நாளன்று கோவிட்-19 தடுப்பு பாதுகாப்பு வழிமுறைகளை தவறாது பின்பற்றி வாக்களிக்க வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி.பி.உமாமகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் டெய்சிகுமார், மாவட்ட உணவு பாதுகாப்பு அலுவலர் மரு.பிரவீன்குமார், நகராட்சி பொறியாளர் ஜீவாசுப்பிரமணியன், வட்டாட்சியர் முருகப்பன், இளம் வாக்காளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**